# “தர்ஹா”

முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் பலர் வலிமார்கள், மஹான்களின் கபுருகளை, வணக்க வழிபாட்டு இடங்களாகக் கருதிப், பல அநாச்சாரங்களைச் செய்து வருவது அனைவரும் அறிந்ததே! ஜியாரத் என்ற பெயரால் அங்கு நேர்ச்சை, முறையிடல், சுஜூது செய்தல், பூப்போடல், கபுரைச் சுற்றுதல், அவர்கள் பெயரால் அறுத்துப் பலியிடல், இன்னும் பலப் பல சடங்குகளை, நிரம்பப் பக்தி சிரத்தையோடு, நிறைவேற்றி, அவற்றைக் கொண்டு தங்கள் உலகத் தேவைகள் பூர்த்தியாவதோடு மறுமையிலும் நன்மைகள் ஏராளமாகக் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இவற்றிற்குக், குர்ஆனிலும், ஹதீஸ் களிலும் ஆதாரங்கள் கிடைத்தால், நாமும் அவற்றைப் பக்தியோடு, எடுத்து நடத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால் குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் அவை குற்றம், இறைவனுக்கு இணை வைக்கும் கொடிய செயல்கள் என்ற ஆதாரங்களே கிடைக்கின்றன.

## ஷிர்க்கின் ஆரம்பம்

இறைவனுக்கு இணைவைக்கும் கொடிய செயலின் தொடக்கமே பெரியார்களின் கபுருகளில் நின்றுதான் தொடங்கியது, என்று குர்ஆன் தெளிவு படுத்துகிறது.

**“அன்றி, நீங்கள் உங்கள் தெய்வங்களை விட்டு விடாதீர்கள்”** வத்தையும் **‘ஸுவாஉ’ ‘எகூஸ்’ ‘யஊக்’ ‘நஸ்ர்’ ஆகியவைகளையும் விட்டுவிடாதீர்கள்** (அல்குர்ஆன் 71:23) (என்று நபி நூஹ்(அலை) மக்களில் பலர் கூறினர்).

நபி ஆதம்(அலை) முதல், நபி நூஹ்(அலை) வரை மக்கள் பஞ்சமா பாவங்களைச் செய்தனர். ஆனால் இறைவனுக்கு இணை வைக்கவில்லை. பாவங்களை, பாவங்கள் என்று கருதிச் செய்ததால், இறைவனிடம் பாவ மன்னிப்புக் கேட்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வும் அவர்கள் தெளபாவை ஏற்று, அவர்களை மன்னித்துக் கொண்டே இருந்தான். ஷைத்தானுக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது தன் முயற்சிகள் அனைத்தும் வீணாவது குறித்து மிகவும் வருந்தினான் ஆதத்தின் சந்ததிகளை வழிகெடுக்க, மாற்று வழி என்ன? என்று ஆராய்ந்தான். மக்கள் இறைவனிடம்

தௌபா செய்யாமல் இருப்பதாக இருந்தால், அவர்கள் பாவங்களைப் புண்ணியம் என்று கருதிச் செய்ய வேண்டும். இறுதியில் ஷைத்தானுக்கு நல்லதொரு யோசனை தோன்றிற்று. அதாவது அன்று வாழ்ந்திருந்த பெரியோர்களான **'வத்' 'ஸுவாஉ' 'எகூஸ்' 'யஊக்' 'நஸ்ர்'** ஆகியோரிடம் மக்களுக்கு அளவு கடந்த பிரியத்தை அவன் உண்டாக்கினான். அந்த பிரியத்தைக் காரணமாக வைத்து, அவர்கள் மறைவுக்குப் பிறகு, அவர்களது கபுருகளைத் '**தர்ஹா**'களாக்கி, நம்மில் பலர் இப்போது செய்வதுபோல் சடங்குகளைச் செய்யத் தொடங்கினார்கள். ஷைத்தானின் வலையில் சிக்கியவர்கள், காலங்கடந்தபின், அவர்களின் நினைவு மறைந்துவிடும் என்ற அச்சத்தை உண்டாக்கி, அந்தப் பெரியார்கள் பெயரால் சிலைகளை வடிக்கச் செய்தான் ஷைத்தான். அந்தச் சிலைகளுக்கும் மரியாதை செய்து சிலை வணக்கத்தைத் தொடங்கினார் கள். ஆக ஷிர்க்கின் தொடக்கம் கபுருச் சடங்குகள் பின்னர் சிலை வணக்கங்கள்.

பெரியார்களின் பெயரால் இடம்பெற்ற இந்த இரு வித ஷிர்க்குகளையும் ஒழித்துக்கட்டி, ஏகத்துவத்தை நிலைநாட்டவே, நபி நூஹ்(அலை) ரஸூலாக இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டார்கள். பஞ்சமா பாவங்களையும், பாவங்கள் என்று எண்ணிச் செய்ததால், மக்களின் உள்ளங்களே அவர்களை வருத்திக் கொண்டிருந்தன. அதனால் திருந்தும் வாய்ப்பிருந்தது. ஆனால் '**தர்ஹா**' சடங்குகளையும், சிலை வணக்கங்களையும், நன்மையாக எண்ணிச் செய்ததால், நபி நூஹ்(அலை) அவர்களின் போதனையை அம் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அளவு கடந்த துன்பங்களை அவர்களுக்குக் கொடுத்து, நூஹ்(அலை) அவர்களின் சாபத்தால், இறைவனால் பிரளயத்தில் அவர்கள் அழித்தொழிக்கப்பட் டார்கள் விரல் விட்டு எண்ணப்பட்ட ஒரு சிலரைத் தவிர. இதுவும் குர்ஆன் கூறும் வரலாறு. இதே போல் நபி நூஹ்(அலை) அவர்களுக்குப் பின் வந்த நபிமார்கள் அனைவரும், மக்களைத் '**தர்ஹா**' சடங்குகளிலிருந்தும், சிலை வணக்கங்களிலிருந்தும் தடுத்து, ஒரே இறைவனை மட்டுமே வணங்கும் ஏகத்துவத்தைப் போதித்தார்கள். இறுதியாக நபி முஹம்மது(ஸல்) அவர்களும், குறைஷ்களிட மிருந்து வந்த '**தர்ஹா**' சடங்குகளை, சிலை வணக்கம், கொடிகள், நிஷான்கள் இவைபோன்ற அனைத்து அடை

யாளச் சடங்குகளான அனைத்து வணக்கங்களையும் ஒழித்துக்கட்டி, ஒரே இறைவனை மட்டும் வணங்கும் ஏகத்துவத்தைப் பெரும் போராட்டங்கள், தியாகங்கள், இழப்புகள், அனைத்தையும் ஏற்று நிலை நாட்டினார்கள்.

**"முஹம்மது (நம்) தெய்வங்கள் யாவற்றையும் நிராகரித்து விட்டு, ஒரே ஆண்டவன்தான் என்று ஆக்கிவிட்டாரா? நிச்சயமாக இது மிகவும் ஆச்சரியமான ஒன்றுதான்"**

*அல்குர்ஆன் 38:5*

ஆம். குரைஷ்கள் அல்லாஹ்வையும் இரவு, பகலாக அழைத்து வந்தார்கள். அத்துடன் தங்கள் நலனுக்காகவும், இறைவன் பால் அணுகத் தங்களுக்குப் பரிந்து பேசுவதற்காகவும், மலக்குகளையும், இப்ராஹீம் (அலை) இஸ்மாயீல்(அலை) ஈஸா(அலை) போன்ற நபிமார்களையும், **'லாத்', 'மனாத்', 'உஸ்ஸா'** போன்ற பெரியார் களைச் சிலை வடிவிலும் அமைத்து உதவி தேடி வந்தார்கள்.

**"எவர்கள் அல்லாஹ் அல்லாதவர்களைப் பாது காவலர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அத்தெய்வங்கள் எங்களை அல்லாஹ்வுக்கு மிக்க சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவேயன்றி, நாங்கள் இவற்றை வணங்கவில்லை"** என்று கூறுகிறார்கள்.

*அல்குர்ஆன் 39:3*

**"இத்தெய்வங்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக் காகப் பரிந்து பேசுகின்றன"** (என்று கூறினர்)

*அல்குர்ஆன் 10:18*

**"மின்தூனில்லாஹ்"** என்ற அரபிப்பதத்திற்குச் சில அன்பர்கள், **'அல்லாஹ்வைத் தவிர'** என்ற பொருள் கொள்ளாமல், **"அல்லாஹ்வுக்கு எதிராக"** என்ற பொருள் கொண்டு, தாங்களும் வழிகெட்டு, மக்களையும் வழிகெடுக்கிறார்கள். குறைஷ் காஃபிர்கள் சிலைகளையும், மறைந்த பெரியார்களையும், இப்போது நம் முஸ்லிம் சகோதரர்களில் பெரும்பாலோர் சொல்வதுபோல், அல்லாஹ் வுக்குச் சமீபமாக்கி வைக்கும் பரிந்து பேசும் என்ற எண்ணத்தோடுதான் அழைத்து வந்தார்கள் என்பதற்கு மேற்கண்ட இறை வசனங்கள், நல்ல ஆதாரங்களாக இருக்கின்றன.

ஆக வணங்கி, ஹஜ் செய்து தான, தர்மம் வழங்கி, அல்லாஹ்வை மிகுதியாக நினைத்து வந்த, தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொண்ட, குரைஷ் மக்களுக்கு நடுவில் தான் நபி(ஸல்) அவர்கள் ஏகத்துவத்தைப் போதிக்க அனுப்பப்பட்டார்கள். அதேபோல் இன்றும் நம்மில் பலர் முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொண்டு, அந்தக் குரைஷ்கள் செய்து வந்த சடங்குகளையே செய்து வருகின்றனர். முஸ்லிம்களில் பலரைச், சில சுயநலமிகள் குழப்பி வருகிறார்கள் நபி(ஸல்) அவர்கள் சிலை வணக் கத்தைத் தடுத்தார்கள். வலிமார்களின் கபுருகளில் சடங்குகளைச் செய்வதைத் தடை செய்யவில்லை என்பதே அவர்களின் தவறான போதனையாகும். உண்மை யில் நபி(ஸல்) அவர்கள் அன்று குரைஷ்களிடமிருந்த '**தர்ஹா**' சடங்கு, சிலை வணக்கம், இதரச் சடங்குகள் அனைத்தையும் ஒழித்துக்கட்டி, ஒரே இறைவனை மட் டும் வணங்குவதையே, வணக்க மாக்கினார்கள் என்பதே உண்மையாகும். நபி(ஸல்) அவர்களிடத்தில், பெரியார் களின் சிலைகளுக்கும் பெரியார்களின் கபுருகளுக்கும் எந்தவித வேறுபாடும் இருக்கவில்லை என்பதை, அலீ(ரழி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் இட்ட கட்டளை மெய்ப்பிக்கிறது. "**எந்தச் சிலையையும் விட்டு வைக்காது உடைத்துவிடும் எந்தக் கபுரையும் விட்டு வைக்காது தரைமட்டமாக்கிவிடும்**" என்று நபி(ஸல்) அவர்கள் என்னை அனுப்பியது போல், உம்மை அனுப்புகிறேன் என்று அபூ அய்யாஜில் அசதி(ரழி) அவர்களிடம், அலீ(ரழி) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி) நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு கூறினார்கள்: "**முன் சமுதாயத்தினர் நபிமார்களுடைய, சாலிஹீன்களுடைய கபுருகளை வணங்குமிடமாக ஆக்கி இருந்தார்கள். உங்களுக்கு அதை நான் தடை செய்கிறேன்.** (நஸயி) நபி(ஸல்) அவர்கள் துஆ "**இறைவா என்னுடைய கபுரை வணங்குமிடமாக ஆக்கிவிடாதே**" (அல்முஅத்தா) "**நீங்கள் என்னுடைய கபுரை**"(ஈத்) '**உரூஸ்**' **கந்தூரி நடத்தும் இடமாக ஆக்கி விடாதீர்கள்** (அபூதாவூத்). "**கபுருகளைச் ஜியாரத் துச் செய்யும் பெண்களையும், அங்கு விளக்கு கொளுத்து பவர்களையும், கபுரை வணங்குமிடமாக ஆக்குவோரையும் அல்லாஹ் சபித்தி ருக்கிறான்**" என்று நபி(ஸல்) அருளினார்கள்.

***(அபூதாவூத், திர்மிதி, நஸயி)***

இன்றும் சிலைகளையும் விக்ரகங்களையும் வணங்குபவர்கள், அந்தச் சிலைகளையோ விக்ரகங் களையோ வணங்குவதில்லை. அவற்றிற்குரிய பெரியார் களைத்தான் வணங்குகிறார்கள், நபி(ஸல்) உம்மத்தில் மட்டுந்தான் வலிமார்கள் உண்டு என்ற எண்ணம் தவறு. ஆதம்(அலை) அவர்கள் காலத்திலிருந்து வலிமார்கள் இருந்து வருகிறார்கள். இதனை முஸ்லிம் அன்பர்கள் நன்கு விளங்கிக் கொள்வார்களாக.

**"தவிர மனிதர்களை (உயிர் கொடுத்து) எழுப்பப் படும் சமயத்தில் அவர்கள் இவர்களுக்கு விரோதிகளாகி, இவர்கள் (தங்களை) வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள்."** *அல்குர்ஆன் 46:6*

இந்த அல்குர்ஆன் வசனப்படி, சிலைக்குரியவர் களும், கபுருக்குரியவர்களும் உதவிக்கு அழைக்கப்படக் கூடியவர்கள் இல்லை என்பது தெளிவாகிறது.

## நபி(ஸல்) அவர்கள் செய்து காட்டி இருப்பார்களே!

முஸ்லிம்களில் பெரும்பாலோர் நினைப்பதுபோல் '**தர்ஹா**' சடங்குகள் இஸ்லாத்தில் இருந்திருந்தால், நபி(ஸல்) அவற்றை எல்லாம் அழகாகச் செய்து காட்டி இருப்பார்கள். நபி(ஸல்) அவர்களது காலத்தில் மரண மடைந்த, அவர்களின் இரு மனைவிமார்களுக்காக, '**தர்ஹாக்கள்**' கட்டி இருக்கலாம். அருமை மகனார் இப்ராஹீம்(ரழி) அவர்களுக்காக 'தர்ஹா' கட்டி இருக் கலாம். இறைவனால் தெளிவாக அவனது வலிமார்கள் என்று அறிவிக்கப்பட்ட பத்ரீன்கள், உஹதீன்கள் இன்னும் பெரும் பெரும் சஹாபா பெருமக்களுக்காகத் தர்ஹாக்கள் கட்டப்பட்டிருக்கலாம். 3ஆம்நாள், 7ஆம்நாள், 40ஆம்நாள் பாத்திஹாக்களெல்லாம் செய்து காட்டி இருப்பார்கள் உரூஸ்கள், சந்தனக்கூடுகள் நடத்திக் காட்டி இருப்பார் கள். கபுரு சடங்குகள் அனைத்தையும் தொழுகையைக் கற்றுக் கொடுத்தது போல, முறையாகக் கற்றுத் தந்திருப் பார்கள். அவர்கள் தகுதிக்கு அது தகுதியானதன்று அதனால் கற்றுத் தரவில்லை என்று சிலர் சொல்வார்கள். தொழுகையில், அஸ்ஸலாமு அலைக்க அய்யு ஹன்ன பிய்யு என்று அவர்களே தனக்குத்தானே சலாம் சொல்லி, ஓதிக்காண்பித்துத் தந்த நபி(ஸல்) அவர்கள், இந்த

தர்ஹா சடங்குகளைச் செய்து காட்டித் தருவது அவர்களது தகுதியைக் குறைப்பதாகாது.

ஆனால், அப்படி ஒன்றையும் அவர்கள் நமக்குக் கற்றுத் தரவில்லை. மாறாக அவை எல்லாம் இறைவனுக்கு இணைவைக்கும் மாபெரும் குற்றம் என்று கொண்டு நம்மை அவற்றைவிட்டு விலக்கி இருக்கிறார்கள். சஹாபா பெருமக்களெல்லாம் பொது கபுரஸ்தானில்தான் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்காக எந்தவிதச் சடங்குகளும் நடத்தப்படவில்லை என்றே ஹதீஸ் ஆதாரங்கள் உள்ளன. நபி(ஸல்) அவர்களால் ஏவப்பட்ட, **'ஜியாரத்',** பொதுவான கபுரஸ்தானுக்குச் சென்று வருவதேயாகும். அதுவும் மறுமையைப் பற்றிய அச்சத்தையும், மரணபயத்தையும் உண்டாக்கி, மனிதன் அல்லாஹ்வுக்குப் பயந்து வாழத்தூண்டும் நோக்கத்துடனே அல்லாமல், வணக்க அடிப்படையில் அன்று. தனிப்பட்ட முறையில் கட்டப்பட்டுள்ள **தர்ஹாக்களுக்குச் சென்று வருவது நபி(ஸல்) அவர்களால் ஏவப்பட்ட 'ஜியாரத்'** அன்று குர்ஆனால், நபி(ஸல்) அவர்களால் தெளிவாக ஏவப்படாத, இந்த '**தர்ஹா**' சடங்குகளுக்காக, கச்சையைக் கட்டிக் கொண்டு போராடுகிறவர்கள், குர்ஆனைக் கொண்டும், ஹதீஸ்களைக் கொண்டும், மெய்ப்பிக்கப்பட்டுள்ள தெளிவான, கண்டிப்பான கடமைகளான தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்ற தலையாய கடமைகளை, 100க்கு 99 முஸ்லிம்கள் '**தர்ஹா**' சடங்குகளைக் கொண்டு சொர்க்கத்தை அடைந்து விடலாம் என்ற மூட நம்பிக்கையால், முற்றிலும் கை விட்டு வாழுகிறார்களே, அதற்காக என்ன முயற்சி செய்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கட்டும்.

மேலும் பெண்களைப் பொறுத்த அளவில், பொது கபுரஸ்தானுக்கும், பெரியார்கள் அடங்கியிருக்கும் '**தர்ஹா**'க்களுக்கும் செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்ட செயலாகும். நபி(ஸல்) அவர்கள் தன் மகளார் பாத்திமா(ரழி) அவர்களையே, "நீ கபுரஸ்தானுக்குச் சென்றிருந்தால், உன் தகப்பனின் பாட்டன் சுவர்க்கம் செல்லாதவரை நீ செல்ல முடியாது" என்று கடுமையாக எச்சரித்த ஒரு நீண்ட ஹதீஸ் அபூதாவூது, நஸயீயில் காணப்படுகிறது.

தாகத்திற்குத் தண்ணீர், நோய்க்கு மருந்து, உதவிக்கு அவ்லியாக்கள் இப்படி எல்லாம் சில அன்பர் கள் குழப்பி வருகிறார்கள். சுகத்திற்காக டாக்டரிடமும், வழக்குக்காக வக்கீலிடமும், பல பல தேவைகளுக் காக நண்பர்களிடமும் உதவிகள் பல தேடும்போது, தர்ஹா சென்று அவுலியாக்களிடம் உதவி தேடுவதில் மாத்திரம் என்ன தவறு ஏற்பட்டுவிடும்? என்று கேட்கிறார்கள். இதற்கு ஆதாரமாக நபிமார்கள் தங்களுடைய வாழ்நாட் களில் அல்லாஹ் அல்லாதவர்களிடம் பெற்றுக்கொண்ட உதவிகள் சம்பந்தமாகக் குர்ஆனில் வரும் வசனங் களைக் காட்டுகிறார்கள். அந்த அன்பர்கள் காரண காரி யங்களின்றிப் பெறப்படும் உதவி, காரண காரியங்களோடு கூடிய உதவி என இருவகை உண்டு என்று அறிந்து கொள்வார்களாக. “**செருப்பின் வார் அறுந்தாலும், அல்லாஹ்விடமே கேளுங்கள்**” என்பது சஹீஹான ஒரு நபி மொழியாகும். அப்படியானால் இந்த அன்பர்கள் அல்லாஹ்வையே நேரடியாக வந்து, தங்கள் செருப்பைச் சீர் செய்து தரும்படி கேட்பார்கள் போலும். இங்கு அல்லாஹ்விடம் கேட்கும் உதவி காரண காரியமற்றது. காரண காரியங்களுடன் கூடிய உதவிக்கு மனிதனிடம் தான் செல்ல வேண்டும். காரண காரியங்களற்ற உதவியைப் படைப்புகளிடம் நாடுவதுதான் ‘**ஷிர்க்**’ தடைசெய்யப் பட்டது என்பதை அந்த நண்பர்கள் விளங்கிக் கொள்வார்களாக. உதாரணமாக ஒரு வலியுல்லாஹ் உயிருடன் இருக்கிறார். அவர் தன்னிடம் வருபவர்களிடம் பேசுகிறார் பேசுவதைக் கேட்கிறார். அவரிடம் ஒருவர் சென்று தனக்காக அல்லாஹ்விடம் ‘**துஆ**’ செய்யும்படிக் கேட்கலாம் இன்னும் உதவி ஏதும் தேவைப்பட்டாலும் அவரிடம் கேட்கலாம். அவரும் செய்து கொடுக்கலாம். இது ஷரீஅத்தில் அனுமதிக்கப் பட்டதே. அதே அவுலியா நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறார் சிறிய மௌத்தில் இருக்கிறார். அப்போது யாரும் அவரிடம் சென்று சலாம் சொன்னால் பதில்சொல்வாரா? பேசினால் பதிலளிப்பாரா? ‘**துஆ**’ செய்யும்படிச் சொன்னால், அதைக்கேட்டுத் ‘**துஆ**’ செய் வாரா? சாதாரண அறிவு படைத்தவனுக்கும் தெரியும், தூங்குவதால் இவை அனைத்தும் அவரிடம் நடக்க மாட்டா என்பது.. அப்போது அவர் உதவி கேட்டாலும் செய்யமாட் டார். சிறிய மௌத்தான தூக்கத்திலேயே இந்த நிலை

என்றால், பெரிய மௌத்தான அசல் மௌத்தை அடைந்தவரிடம் உதவி கேட்க முடியுமா? என்பதை நிதானமாகச் சிந்திக்க. வலிமார்கள் கபுரில் உயிருடன் இருந்து வருகிறார்கள் என்ற எண்ணம் தவறு என்பதற்கு ஹதீஸ் ஆதாரம் பின்னர் வருகிறது.

இவர்கள் தங்கள் வாதங்களில் உண்மையாளர் களாக இருந்தால், வலிமார்கள் உயிருடன் இருக்கும்போது பணத்தின்மீது விருப்பம் இருக்கவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். இப்போதா அது இருக்கப்போகின்றது. ஆகவே தர்ஹாக்களில், நிஷான்களில் உள்ள உண்டியல் கள் அனைத்தையும் அகற்றிவிட்டுப், பணத்திற்காக இல்லாமல், பக்திக்காக மட்டும் தர்ஹா சடங்குகளைச் செய்யட்டுமே பார்க்கலாம். இதிலிருந்தே பொதுமக்கள், தர்ஹா சடங்குகள் இவர்களின் சுயநலத்திற்காக ஏற்படுத்தப்பட்டவை என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். தர்ஹாக்களில் சென்று முறையிடுவதால் தங்கள் நாட்டங்கள் நிறைவேறுகின்றன, நோய் நீங்கு கிறது பிள்ளை கிடைக்கிறது வியாபாரத்தில் பரக்கத் உண்டாகிறது என்ற நம்பிக்கைத் தொடர்பால் ஈடுபடு கின்றனர். அந்தச் சகோதரர்கள் விளங்கிக் கொள்ளட் டும், கோயில்களிலும் சிலைகளுக்கு முன்னாலும், சர்ச்சுகளிலும், குளம், குட்டை என்று போய் முறை இட் டாலும் இதே போல் நாட்டங்கள் நிறைவேறுகின்றன. அப்படியானால் அங்கும் வலிமார்களின் கராமாத்துகள் நடக்கின்றன என்று நம்புகிறார்களா? இவை அனைத்தும் நம் ஈமானைப் பங்கப்படுத்தி, நம்மை நரகில் சேர்க்க ஷைத்தானின் சூழ்ச்சி என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தவறான விளக்கம் : முஸ்லிம்களை வழிகெடுப் போர் ‘**அலா இன்ன அவுலியாஅல்லாஹி லாகவுபுன் அலைஹிம் வலாஹும் யஹ்சனூன்**’ என்ற குர்ஆன் வசனத்தை ஓதி மயக்குகின்றனர். இந்த ஆயத்தின் பொருள் இதுதான்க அல்லாஹ்வுடைய அவுலியாக் களுக்கு, உறுதியாக அச்சமோ துன்பமோ இல்லை அவர்கள் ஈமான் கொண்டு, அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்கின்றனர். “**அல்லதீன ஆமனூ, வகானூயத் தகூன்**” **(10:63)** என்ற பிற்பகுதியை ஓதாமல் மறைத்து விடுவார்கள்.

இந்த வசனங்களிலிருந்து அவுலியாக்களிடம் சென்று கேட்கலாம் அவர்களால் உதவி செய்யமுடியும், என்ற பொருளைப் பெற முடியுமா? என்று நீங்களே சிந்தியுங்கள்.

**“லாகவுபுன் அலைஹிம் வலாஹுூம் யஹ்சனூன்”** என்ற வசனம் குர்ஆனில் சுமார் 16 இடங்களில் வருகின்றது. தொடக்கமாக 2:38-ல் வருகிறது. அதில் ஆதம்(அலை) தவறு செய்ததன் காரணமாக, பூமிக்கு இறக்கிவிடும்போது, **“என்னிடமிருந்து நேர்வழி நிச்சயமாக வரும் எவர் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகிறார் களோ, அவர்களுக்குப் பயமோ, துக்கமோ இல்லை”.** என்று இறைவன் கூறுகிறான்.

இப்படிப்பட்ட வசனங்கள் மூலமாக, அல்லாஹ் குர்ஆனில் எப்படி ஆணையிட்டிருக்கிறானோ, அந்த ஆணைக்கு, நபி(ஸல்) அவர்கள் எப்படி விளக்கம் கொடுத்தார்களோ, அப்படியே நடக்க வேண்டும் என்று ஏவப்பட்டிருக்கிறதே அல்லாமல், வலிமார்களின் தர்காக் களுக்குச் சென்று உங்கள் தேவைகளைக் கேளுங்கள், அவர்கள் கொடுப்பார்கள் என்று இறைவன் சொல்ல வில்லை.

**இதே போல், இன்னொரு இறை வசனத்தையும், ஓதிக்காட்டி, மக்களை வழிகெடுப்பார்கள். ஷஹீதுகளை இறந்தவர்களாக நீங்கள் எண்ணவேண்டாம் அவர்கள் நம்மிடம் உயிரோடிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உணவளிக்கிறோம். நீங்கள் அறிய மாட்டீர்கள்.**

***அல்குர்ஆன் 2:154, 3:169***

இந்த வசனங்களுக்கு நபி(ஸல்) அவர்கள் விளக்கம் கொடுக்கும்போது, அவர்களின் உயிர்கள் பறவைகளின் உடலில் புகுத்தப்பட்டுச் சுவர்க்கலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். அங்குள்ள கனிகளைச் சுவைத்து மகிழ்வார்கள் என்று தெளிவு படுத்தினார்கள். இவர்கள் சொல்வதுபோல் கபுரில் அவர்கள் உயிரோடு இல்லை. இந்த ஹதீஸ் அபூதாவூதில் காணப்படுகிறது.

## வழி கெடுப்போர் யார்?

இப்படிக் குர்ஆனுக்குத் தங்கள் விருப்பம்போல் விளக்கம் கொடுத்து, மக்களை வழி கெடுப்பவர்களை

அல்லாஹ் மாறுபாட்டுக்காரர்கள், குழப்பக்காரர்கள் என்று வர்ணிக்கிறான். நபி(ஸல்)அவர்களும், இப்படிப் பட்ட குழப்பக்காரர்களைவிட்டு எச்சரிக்கையாக இருக்கும் படி எச்சரிக்கிறார்கள். (புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி) அந்த இறை வசனத்தையும் உங்களுக்கு அறியத் தருகிறோம்

(நபியே!) அவனே, இந்நெறிநூலை உம்மீது அருளினான். இதில் (தெளிவாகவும்) குறிப்பாகவும் உள்ள ஒரே கருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. இவை தாம் இந்நெறிநூலின் அடிப்படை எஞ்சியவை பல பொருள்களுக்கு இடம்பாடான (உவமைப் பொருள் கொண்ட)வை. எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் அதில் குழப்பத்தை உண்டு பண்ணக் கருதி, (இத்தகைய வசனங்களில்) பல பொருளுள்ளவற்றை ஒரே பொருளாக்கி அதைப் பின் பற்றுவார்கள். ஆயினும், இவற்றின் முடிவான பொருளை அல்லாஹ்வையன்றி எவரும் அறியார். கல்வியறிவில் நிலைபெற்றவர்களோ இதனையும் நாங்கள் விசுவாசித் தோம், (இவ்விருவகை வசனங்கள்) யாவும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவை தாம்” என்று கூறுவார்கள். அறிவுடையோர்களையன்றி மற்றெவரும் இவைகளைக் கொண்டு நல்லுபதேசமடையார்.

*அல்குர்ஆன் 3:7*

உண்மை முஸ்லிம்களே இறைவனது வசனங்களுக்குத் தங்கள் விருப்பம் போல விளக்கம் கொடுப்பவர்கள் யார்? என்று அடை யாளம் கண்டு கொள்ளுங்கள். அவர்களே மார்க்கத்தை வைத்து வயிறு வளர்ப்பவர்கள். அவர்களை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். அவர்களை இனங் கண்டு கொள்வதற்கு இன்னொரு இறைவசனத்தையும் இங்கே தருகிறோம்

‘‘மனிதரில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் (பொய்யான கட்டுக் கதைகள் முதலிய) வீணான செய்திகளை விலைக்கு வாங்கி (அவற்றை ஜனங்களுக்கு ஓதிக் காண்பித்து) அல்லாஹ்வுடைய வழியிலிருந்து,

அறிவின்றி (ஜனங்களை) வழிகெடுத்து, அதனைப் பரிகாசமாகவும் எடுத்துக் கொள்கின்றனர் இத்தகை யோருக்கு இழிவுதரும் வேதனை நிச்சயமாக உண்டு. (31:6) வழிகெடுக்கும் தீயவர்கள் யார்? என்று புரிந்து கொண்டிருப்பீர்கள்.

## அப்பட்டமாக அல்லாஹ் சொல்கிறான்!

இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல், இறைவனது அடியார்களான அவுலியாக்களைத் தங்கள் தேவைகளை நிறைவு செய்வோர் என்று நம்புகிறவர்களைத் தெளிவாக காஃபிர் என்று சொல்லி, அவர்கள் நரகவாதிகள்தான் என்று திட்டமிட்டுச் சொல்லும், இறைவசனங்களை உங்களுக்கு அறியத் தருகிறோம்க

**''அபூஹசிபல்லதீன கஃபரு அன்யத்தகிதூ இபாதீமின்தூனீ அவுலியா இன்ன அஃதத்னா ஜஹன்னம லில்காஃபிரீ னநுஸுலா''**

**''இந்த காபிர்கள் அல்லாஹ்வாகிய நம்மைவிட்டு, விட்டு நம்முடைய அடியார்களைத் தங்களுடைய அவுலி யாக்களாக எடுத்துக் கொள்ளலாம் என நினைக்கிறார் களா? நிச்சயமாக அப்படிப்பட்ட காஃபிர்களை உபசரிக்க, நாம் நரகத்தைச் சிந்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.''**
*அல்குர்ஆன் 18:102*

**''தங்களுடைய அமல்களில் பெரிய நஷ்டமடைந்தவர் களை, நாம் அறிவித்துத் தரட்டுமா?''** (நபியே!) கேளும் (18:103) **''அவர்கள் பாவமான கருமங்களைச் செய்து கொண்டு, மெய்யாகவே தாங்கள் மிக நல்ல காரியங் களைச் செய்வதாக எண்ணிக் கொள்வார்கள்''.**
*அல்குர்ஆன் 18:104*

இவர்கள் தங்கள் இறைவனின் வசனங்களையும், அவனது சந்திப்பையும் நிராகரித்து விட்டார்கள். அவர்கள் நற்செயல்கள் யாவும் அழிந்து விட்டன. மறுமை நாளில் அவர்களுக்காக எடைக் கோலையும் நாம் நாட்ட மாட் டோம். **(18:105)**

**அவர்கள் என்னுடைய வசனங்களையும், என்னுடைய தூதர்களையும் நிராகரித்துப் பரிகாசமாக எடுத்துக் கொண்டதன் காரணமாக நரகமே அவர்களுக்குக் கூலியாகும். (18:106)**

(நபியே!) நீர் கூறும், **"நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒருமனிதன்தான். நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப் பட்டுள்ளது.**

**ஆகவே எவன் இறைவனைச் சந்திக்க விரும்புகிறானோ, அவன் நற்கருமங்களைச் செய்து, தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக.** *அல்குர்ஆன் 18:110*

தீயவரின் வலையில் விழாதீர் : திசை திருப்பும் தீயவர்கள், இந்த வசனங்கள் குரைஷ் காஃபிர்களைப் பற்றிக் கூறியது. நமக்கல்ல என்று சப்பைக் கட்டு கட்டுவார்கள். ஏமாந்து விடாதீர்கள். குரைஷ் காஃபிர்கள் யார்? நபி இப்ராஹீம்(அலை), அவர்களின் வாரிசுகள் சந்ததிகள். அவர்களது மொழியில் ஸய்யிதுகள். நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் மார்க்கமாகிய இஸ்லாத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் என்றுதான் தங்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வை மட்டும் வணங்கச் சொன்னவுடன், நபி(ஸல்) அவர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் பேதீன் (இஸ்லாத்தை விட்டு அப்புறப்பட்டவர்கள்) என்று கூறினார்கள். அவர்கள் வணங்கி, ஹஜ் செய்து, தான தர்மம் செய்து, அல்லாஹ்வை மிகுதியாகத் திக்ரு செய்தவர்களே. நம்மைவிட அல்லாஹ்விடம் மிகுந்த நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அப்ரஹா, கஃபாவை இடிக்க வந்தபோது, **'கஃபாவுக்கு சொந்தக்காரன்'**, அல்லாஹ், அவன் தனது வீட்டைப் பாதுகாத்துக் கொள்வான் என்று சொல்லி, இறைவன் மீதுள்ள நம்பிக்கையைத் தெளிவாக வெளியிட்டவர்கள்.

அன்பு முஸ்லிம் சகோதரர்களே

அந்தக் குரைஷ்கள் செய்த பெருந்தவறு, நாம் இன்று செய்வதுபோல், மலக்குகளையும், நபிமார்களையும், வலிமார்களையும், உதவிக்காக அழைத்ததுதான். அவர்கள் தங்களை அல்லாஹ்வின்பால் நெருங்க உதவி செய்வார்கள், அவர்களின் பொருட்டால் கேட்கலாம் என்று நம்பியதுதான். இக்காரணத்தால்தான் அவர்களைக் காஃபிர்கள் என்றும் அவர்கள் தங்குமிடம் நரகம் என்றும் தெளிவாக இறைவன் அறிவித்தான். அதே தவற்றை நாமும் செய்து நரகப்படுகுழிக்குச் செல்வதைவிட்டு, நம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக. '**தர்ஹா**' சடங்குகளைவிட்டுத் தெளபாச் செய்து மீள்வோமாக, ஆமீன்.

வெளியீடு : 8
15.3.1985